Registered as a News Paper    பக்கங்கள் 06    விலை ரூபா 5-00

ஈழநாதம்

THE EELANAATHAM Peoples Daily மக்கள் தினசரி

நாதம்: 62    திருவள்ளுவர் ஆண்டு 2022    கார்த்திகை 10    (26 - 11 - 1991)    செவ்வாய்க்கிழமை    ஓசை: 281

## கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதல் சீனி விநியோகம்

யாழ்ப்பாணத்திலுள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்கு கூடுதல் சீனி செயலகத்தினால் அனுப்பிவைக்கப்படும்- 332 மெற்றிக்தொன் சீனி அனுப்பிவைக்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதாக செயலக அதிகாரி ஒருவர் தெரிவித்தார் தனியார் வர்த்தகர்கள் அத்தியாவசியப் பொருட்களை அதிக விலைக்கு விற்பனை செய்கிறார்கள். கடந்தமாதம் 21 ஆம் திகதிக்கு முன்னர் விற்பனை செய்த விலைக்கு பொருட்களை விற்பதற்கு வர்த்தகர்கள் பின்நிற்கிறார்கள் (5ஆம் பக்கம் பார்க்க)

## ◎ மணி ஓசை ◎ மௌன அஞ்சலி ◎ மாவீரர் சுடர்

# தமிழீழ மாவீரர் நாள்;

# இன்று நள்ளிரவு ஆரம்பம்

### இன்று நடைபெறும்

(நமது நிருபர்)

மாவீரர் வார ஐந்தாம் நாள் நிகழ்ச்சியின் விசேட நிகழ்வாக நேற்று மின்னொ (6ஆம் பக்கம் பார்க்க)

(யாழ்ப்பாணம்)

தமிழீழ மண்ணிற்காகவும், மக்களுக்காகவும் தம்மை தியாக வேள்வியில் ஆகுதி ஆக்கிக்கொண்ட மாவீரர்களின் நினைவு நாள் இன்று நள்ளிரவுடன் ஆரம்பமாகிறது. இந்த மாவீரர்களை நினைவு கொள்ளும் முகமாக இன்று நள்ளிரவு 12.00 மணிக்கு தமிழீழமெங்கும் பாரிய மணிகள் ஒலிக்கப்படும். இதனைத் தொடர்ந்து 12.02 வரை மாவீரர்களுக்கு மௌன அஞ்சலி இடம்பெறும். அடுத்து 12.03க்கு மாவீரர் சுடர்கள் ஏற்றும் நிகழ்வும் இடம்பெறும்.

மூன்றாவது மாவீரர் வாரத்தின் இறுதி நாள் புதன் கிழமையாகும். இந்நாள் ஆரம்பமாகும் நள்ளிரவு 12·00 மணிக்கு தமிழீழமெங்கும் உள்ள பாரிய மணிகள் ஒலிக்கப்படுவதுடன் இறுதி நாள் நிகழ்ச்சிகள் ஆரம்பமாகின்றன இப்பாரிய மணிகள் பாடசாலைகள், ஆலயங்கள், நிறுவனங்கள் சகலவற்றிலும் ஒலிக்கப்படும்.

இம் மணிகளின் ஒலியைத் (5ஆம் பக்கம் பார்க்க)

## கிராமங்கள் தோறும் மாவீரர்நாள் நிகழ்ச்சிகள்

மாவீரர் வாரத்தின் ஐந்தாம் நாளான நேற்று மாவீரர்கள் நினைவாக எழுச்சியூட்டும் பல நிகழ்ச்சிகள் யாழ்குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் இடம்பெற்றன.

எழுச்சிக் கூட்டங்கள், கலை நிகழ்ச்சிகள், பட்டி மன்றங்கள் போன்ற பல் சுவை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன.

நேற்றுக் காலை யாழ். இந்துக்கல்லூரியில் மாவீரர் ஐந்தாம் நாள் நிகழ்ச்சியில் 'மெல்லத் தமிழ் இனிச்சாகும் என்ற பாரதியாரின் ஏக்கம் கனவாகிக் கலையுமா? அல்லது நிஜமாகி நிலைக்குமா? என்ற (6ஆம் பக்கம் பார்க்க)

## இன்றும் மீட்புநிதி

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, சாவகச்சேரி, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்த தமிழீழ மீட்பு நிதி கடன் பத்திரகாரர்களின்

## நாளையும் மீளளிப்பு

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு நாளை புதன்கிழமை 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கடன் மீளளிக்

## இன்று பிறந்ததினம்



## தமிழீழத்திற்காகப் போராடியோரை

# தமிழீழம் கௌரவிக்கும்; புலிகளும் கௌரவிப்பர்

: யோகி

## இன்றும் நாளையும் மீட்புநிதி மீளளிப்பு

(யாழ்ப்பாணம்)

பருத்தித்துறை, கரவெட்டி, வடமராட்சி கிழக்கு ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்த தமிழீழ மீட்பு நிதி கடன் பத்திரதாரர்களில் தேர் நெடுக்கப்பட்டவர்களுக்கு நாளை புதன்கிழமை 27 ஆம் திகதி காலை 9 மணிக்கு பருத்தித்துறை வட இந்து மகளிர் கல்லூரியில் கடன் மீளளிக்கப்படும் என தமிழீழ விடுதலைப் புலிகளின் நிதிப்பொறுப்பாளர் செ. தமிழேந்தி அறிவித்துள்ளார்.

மானிப்பாய், உடுவில், சண்டிலிப்பாய், சங்கானை, தெல்லிப்பளை ஆகிய உதவி அரசாங்க அதிபர் பிரிவுகளைச்சேர்ந்த தமிழீழ மீட்பு

(5 ஆம் பக்கம் பார்க்க)

**இலவசஇணைப்பு**
1982 தொடக்கம் மண்மீட்புக்காய்உயிர் நீத்த மாவீரர்களின் குறிப்பேடு இணைக்கப்பட்டுள்ளது.



தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் அவர்களின் 38 ஆவது பிறந்த தினம் இன்றாகும்.

தமிழீழத்திற்காகப் போராடியோரை

# தமிழீழம் கௌரவிக்கும்; புலிகளும் கௌரவிப்பர்

: யோகி

(நமது நிருபர்)

தமிழீழ விடுதலைக்காகப் போராடிய போராளிகளைத் தமிழீழம் என்றும் கௌரவிக்கும்: இன்று நாம் 3500க்கு மேற்பட்ட தமிழீழ விடுதலைப் புலிகளையும், 300க்கு மேற்பட்ட ஈரோஸ் உறுப்பினர்களையும் மாவீரர்களாகக் கௌரவிக்கின்றோம்: அதே வேளை தமிழீழத்திற்காக உண்மையாகப் போராடி உயிர் நீத்தவர்களையும் காலஞ்சென்றாலும் தமிழீழ விடுதலைப் புலிகள் கௌரவிக்க முடிவு எடுத்துள்ளனர்.

இவ்வாறு கடந்த சனிக்கிழமை நாவற்குழியில் நிகழ்

(5 ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். விழாக்கோலம்; இராணுவ தரப்பு அறிவிப்பு

யாழ்ப்பாணம் விழாக்கோலமாகக் காணப்படுகிறது. அங்கு எந்தவித இராணுவத் தாக்குதலும் மேற்கொள்ளப்படவில்லை என்று இராணுவத் தரப்பை மேற்கோள்காட்டி வெரித்தாஸ் வானொலி நேற்று அறிவித்தது.

புலிகள் கொண்டாடும் மாவீரர் தினத்தை முன்னிட்டும் பிரபாகரனின் பிறந்த தினத்தைச் சிறப்பிக்கும் வகையிலும் புலிகள் இராணுவத்தின்மீது புதிய தாக்குதலை நடாத்தலாமெனக்கருதும் இராணுவம் யாழ்ப்பாணப் பகுதியில் காலவரையற்ற ஊரடங்குச்சட்டத்தைப் பிறப்பித்துள்ளது என்றும் அச்செய்தி கூறுகின்றது.

# கையில் குழந்தையுடன் தாய்மார்; உணவு தடையை நீக்க கோரி ஆர்ப்பாட்டம்!

## ஜனாதிபதிக்கான மகஜர் கையளிப்பு

(யாழ்ப்பாணம்)

உணவுப் பொருள்களுக்கான தடையை நீக்கக்கோரியும் குழந்தைகள் பாலுமா இல்லாது அவதிப்படுவதை நீக்கக் கோரியும் நேற்று யாழ்ப்பாணத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டப் பேரணி நடாத்தப்பட்டது,

இப்பேரணியின் இறுதியில் சிறிலங்காவின் ஜனாதிபதி பிரேமதாசாவிற்கு அனுப்புவதற்கென மகஜர் ஒன்று செயலக அதிகாரிகளிடம் கையளிக்கப்பட்டது.

தீவுப் பகுதியிலிருந்து இடம்பெயர்ந்து வந்து யாழ் நகரப் பகுதியிலும், நகரை அண்டிய பகுதியிலும் அகதிகளாகத் தஞ்சமடைந்துள்ள ஆயிரக்கணக்கான பெண்கள் தம் குழந்தைகளுடன் இந்த ஆர்ப்பாட்டப் பேரணியில் கலந்து கொண்டனர்.

இரு பிரிவுகளாக இடம்பெற்ற இந்த ஊர்வலத்தில் சிறிலங்கா அரசின் நடவடிக்கைகளுக்கெதிராக கோஷம் எழுப்பப்பட்டது.

மக்களின் ஒரு பிரிவினர் மாம்பழம் சந்தியிலிருந்து புறப்பட்டு நாவலர் வீதி ஊடாக கோவில் வீதி சென்று அங்கிருந்துபேரணியாக யாழ். செயலகம் வந்தடைந்தனர். இன்னொரு பிரிவினர் மானிப்பாய், நவாலி, சுன்னாகம் ஆகிய பகுதிகளிலிருந்து ஆனைப்பந்தி சந்தி வந்தடைந்து, அங்கிருந்து நாவலர் வீதி வழியாக செயலகத்தை வந்தடைந்தனர்,

(5 ஆம் பக்கம் பார்க்க)

## அகதிகளால் 380 மில். ரூபா இந்தியாவிற்குச் செலவாம்

(டில்லி)

இலங்கைத்தமிழ் அகதிகளுக்கென 1983 ஆம் ஆண்டில் இருந்து 380 மில்லியன் ரூபாய்களை (9.5 மில்லியன் டொலர்கள்) செலவழித்துள்ளதாக இந்திய அரசு தெரிவித்துள்ளது.

இந்திய உள்துறை அமைச்சு விடுத்துள்ள அறிக்கை ஒன்றிலேயே இந்த புள்ளிவிபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது. 210, 944 தமிழ் அகதிகள் இந்தியாவில் உள்ளனர் என்றும், இவர்களில் 115,792 பேர் அகதி முகாம்களில் தங்கியுள்ளனர் என்றும், தமிழக அரசு பதினெட்டுமாவட்டங்களில் அகதி முகாம்களை அமைத்துள்ளது என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## நாகராஜன் விவகாரம் அரசியல் அரங்கில் நுழையுமா?

(சென்னை)

தமிழக முன்னாள் உள்துறை செயலாளர் ஆர். நாகராஜனின் எதிர்காலமும் புலிகளுடனான ரகசிய நடவடிக்கைகளின் அரசியல் பரிமாணமும் அவர் நீதிமன்றத்தின் முன் என்ன நிலைப்பாட்டை எடுக்கப் போகின்றார் என் பதிலேயே தங்கியிருக்கிறது என்று சி. பி. ஐ. அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

சந்தேகங்கள் இத்துடன் நிற்குமா அல்லது அரசியல் அரங்கிற்கும் நகருமா என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும் என்றும், விசாரணைகள் துரிதமாக முடுக்கி விடப்பட்டுள்ளன என்றும் நாகராஜனை பயங்கரவாத மற்றும் சீர்குலைவு தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்து வைத்துள்ளதை நியாயப்படுத்த போதுமான சான்றுகளை சமர்ப்பிக்க முடியுமென்று பொலிசார் தெரிவித்துள்ளனர் என்றும் சி. பி. ஐ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## வரி விளம்பரம்


### இடமாற்றம்

தீவகத்தில் நவீன வைத்திய வசதிகள் கொண்ட "இரெட்ணம் வைத்தியசாலை" இல. 129 ஸ்ரேசன்றோட் [புகையிரத நிலையம் முன்பாக] யாழ்ப்பாணத்தில் [தங்குமிட வாட் வசதிகள் உட்பட] தொடர்ந்து சேவையாற்றுகின்றது. [R/1941]

### இடமாற்றம்

தீவகத்தில் ஊர்காவற்றுறை, வேலணை, புங்குடுதீவில் சேவையாற்றிய பாக்கியம் குழந்தைகள் வைத்தியசாலை தற்காலிகமாக கச்சேரியங்காட்டிலிருந்து 1 மைல் தொலைவில் உள்ள இருபாலைச்சந்தி குமரபுரம் இலக்கத்திற்கு மாற்றப்பட்டுள்ளது. நிர்வாகம். [R/1942]

### வாங்கப்படுகிறது

வேப்பம் விதை, இலுப்பை விதை வாங்கப்படுகிறது. மில்க்வைற் (B/3512)


## கொள்ளையர் பிடிபட்டனர்

(கொழும்பு)

யாழ்தேவி பிரயாணிகளிடம் தங்க நகைகள் மற்றும் பணம் என்பனவற்றைக் கொள்ளையடித்து வந்த கும்பல் ஒன்று கோட்டைப் பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் சி.ஐ.டி. இராணுவம் என்ற போர்வையிலேயே யாழ். பயணிகளிடம் கொள்ளையடித்ததாகவும் பொலிசார் தெரிவித்தனர்.


# மாவீரர் தினம் நவம்பர் 27



நம் மண்ணினைக் காத்திட
தம் உயிர் ஈந்த மாவீரரின்
நினைவுச் சின்னங்களும்
வணக்கத்துக்குரிய ஆலயங்களே!

## சுவையருவி

மின்நிலைய வீதி, யாழ் நகர்.

(B/ 8527)



பருத்தித்துறை பிரதேச சபை, புலோலி

## 1992ஆம் ஆண்டுக்கான கேள்வி அறிவித்தல்

சந்தைகள் இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகளுக்கான சீல் வைத்த கேள்விகள் 2-12-91ஆம் திகதி நண்பகல் 12-மணிவரை புலோலி குடத்தனை செம்பியன் பற்று உப அலுவலக பொறுப்பு அதிகாரியால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட்டு என்னால் 4-12-91ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கு தேவையான மேலதிக விபரங்களையும் கேள்விப் பத்திரங்களையும் அந்தந்த உப அலுவலகங்களில் 2-12-91ஆம்


வடமராட்சியில்

## எழுச்சியூட்டும் வகையில் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள்

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதியில் மாவீரர் வார விழாக்கள் மிக எழுச்சியூட்டக் கூடிய வகையில் நடைபெற்று வருகின்றன.

இவ்விழாக்களிலே பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர். விடு

லுள்ள மேஜர் றஞ்சன் (சித்தப்பா) ஞாபகார்த்த சிறுவர் பூங்காவிலும் மாவீரர் நடுகல் கோட்டத்திலும் உள்ள 340 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்திக் கௌரவிக்கவுள்ளனர்.

இங்குள்ள மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மாவீரர் வார ஆரம்ப தினத்தன்று பெருந்தொகையான பொது

## நினைவு கூருகின்றோம்...

1991 - 11 - 26

1988 ஆம் ஆண்டு இத்தினத்தில் காரைநகரில்

சந்தைகள் இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகளுக்கான சில் வைத்த கேள்விகள் 2-12-91ஆம் திகதி நண்பகல் 12-மணிவரை புலோலி குடத்தனை செம்பியன் பற்று உப அலுவலக பொறுப்பு அதிகாரியால் கேள்விப்பத்திரங்கள் வழங்கப்பட்டு என்னால் 4-12-91ஆம் திகதி நண்பகல் 12 மணிவரை ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கு தேவையான மேலதிக விபரங்களையும் கேள்விப் பத்திரங்களையும் அந்தந்த உப அலுவலகங்களில் 2-12-91ஆம் திகதி நண்பகல் 12-00மணி வரை உரிய தொகையைச் செலுத்தி அலுவலக நேரத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

செ. சிறிநிவாசன்
விஷேட ஆணையாளர்
பருத்தித்துறை பிரதேச சபை

12-11-91
(B-3526)

மாவீரர் வார விழாக்கள் மிக எழுச்சியூட்டக் கூடிய வகையில் நடைபெற்று வருகின்றன.

இவ்விழாக்களிலே பெருந்தொகையான பொதுமக்கள் கலந்து கொண்டு மாவீரர்களுக்கு அஞ்சலிகளைச் செலுத்தி வருகின்றனர். விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணி உறுப்பினர்கள் மாவீரர் ஞாபகார்த்த உரைகளை ஆற்றி வருகின்றனர். கிராமங்கள் தோறும் மாவீரர் ஞாபகார்த்தமாக வீதிகளுக்குப் பெயர்கள் சூட்டப்பட்டு வருகின்றன. மாவீரர்களின் பெற்றோர்கள் பருத்தித்துறையி பூங்காவிலும் மாவீரர் நடுகல் கோட்டத்திலும் உள்ள 340 மாவீரர்களின் திருவுருவப் படங்களுக்கும் மலர்மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி கௌரவிக்கவுள்ளனர்.

இறந்த மாவீரர்களின் திருவுருவப்படங்களுக்கு மாவீரர் வார ஆரம்ப தினத்தன்று பெருந்தொகையான பொதுமக்கள் மலர் மாலைகள் அணிவித்து அஞ்சலி செலுத்தி கௌரவித்தனர்.

மாவீரர்வார விழாவுக்கான சகல ஒழுங்குகளையும் வடமராட்சி மாவீரர் வார செயலகம் கண்காணித்து வருகின்றது. (25)

க. பொ. த. சாதாரண தரம்

# பொதுப் பரீட்சை

| திகதி | முற்பகல் | | பிற்பகல் | |
|---|---|---|---|---|
| 30-11-91 சனி | ஆங்கிலமொழி I<br>ஆங்கிலமொழி II | 08·30 - 09·30<br>09·30 - 11·30 | கணிதம் I<br>கணிதம் II | 12·30 - 01·30<br>01·30 - 04·30 |
| 01-12-91 ஞாயிறு | விஞ்ஞானம் I<br>விஞ்ஞானம் II | 08·00 - 09·00<br>09·00 - 12·00 | வரலாறும் சமூகக்கல்வியும் I<br>வரலாறும் சமூகக்கல்வியும் II | 01·00 - 02·00<br>02·00 - 05·00 |
| 07-12-91 சனி | தமிழ்மொழியும் இலக்கியமும் I<br>தமிழ்மொழியும் இலக்கியமும் II | 08·30 - 09·15<br>09·15 - 11·15 | தமிழ்மொழியும் இலக்கியமும் III | 12·30 - 02·30 |

இப் பரீட்சைக்கு விண்ணப்பித்த மாணவர்கள் அனைவரும் தமது அனுமதி அட்டைகளை 27-11-91 அன்று பெற்றுக்கொள்ளவும்.

பரீட்சைப் பகுதி

## யூனிவேர்சல்

கந்தர்மடம் - யாழ்ப்பாணம். (B/3525)

## அறிவித்தல்

தற்காலிக ஆங்கில போதனாசிரியர் - விவசாயபீடம் கிளிநொச்சி

மேற்படி பதவிக்காக 1991-12-03 (செவ்வாய்க்கிழமை) நடைபெற இருந்த நேர்முகப் பரீட்சை அன்றைய தினம் நடைபெற மாட்டாது என்பதை அறியத்தருகிறேன்.

நேர்முகப் பரீட்சை நடைபெறும் திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

பதிவாளர்.

யாழ். பல்கலைக்கழகம்,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்.
1991-11-25.

(B/3528)

## 1991 - 11 - 26

1988 ஆம் ஆண்டு இதே தினத்தில் காரைநகரில் இந்தியப் படையினருடனான மோதலில் வீரச்சாவு எய்திய

கப்டன் இன்சூர் (சணநாதன் குணநாதன் - 'குமரபதி' சிவன்கோயிலடி, வட்டுக்கோட்டை மேற்கு)

2ஆம் லெப். சூரி (மகாலிங்கம் சூரியகுமார் - காரைநகர்)

இதே பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது வீரச்சாவு எய்திய

குமார் (சேகுதாவுது கபீர் - இரத்தினபுரம், கிளிநொச்சி)

மட்டக்களப்பு ஆரையம்பதிப் பகுதியில் இந்தியப் படையினர் மேற்கொண்ட சுற்றி வளைப்பின் போது சயனைட் உட்கொண்டு வீரச்சாவு எய்திய

முரளி (பீதாம்பரம் நந்தகுமார் - ஆரையம்பதி - 03, மட்டக்களப்பு)

யாழ். பெரிய கோவிலடிப் பகுதியில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவு எய்திய

பெனி (ஞானப்பிரகாசம் பெனி - 532, நாவலர்வீதி, யாழ்ப்பாணம்)

வட்டக்கச்சியில் இந்தியப் படையினரால் சுட்டுக் கொல்லப்பட்ட ஹட்சன் வீதியைச் சேர்ந்த வாய்பேச முடியாத தமிழ்ப் பொதுமகன்

1989 ஆம் ஆண்டு மாதகலில் தேசவிரோதிகளுடனான மோதலில் வீரச்சாவு எய்திய

2ஆம் லெப். வெற்றி (டேவிற்மரியன் அல்பேட்வின்சன் - சுதிபுரம்)

ஆகியோரை இந்நாளில் நினைவு கூருகின்றோம்.

(B/3523)

விடுதலைப் புலிகள்
மக்கள் முன்னணி

### சிந்தனைக்கு

பரவலாக ஒரு கருத்து பரவியுள்ள போது பொதுவாக அது சரியான கருத்தாகவே இருக்கிறது.

— ஜேன் ஆஸ்ட்டென்

ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 26-11-1991
தொலைபேசி
ஆசிரியர்பீடம் 025 - 2839 நிர்வாகபீடம் 2208
த. பெ. எண் 05

# அரசிற்கு எதிரான பல்கலைக்கழகங்கள்

மாகாண மட்டத்தில் பல்கலைக்கழக இணைப்பு கல்லூரிகள் ஆரம்பிக்கப்படுவதை எதிர்த்து தென்னிலங்கைப் பல்கலைக்கழகங்களில் போராட்டங்கள் இடம் பெற்று வருகின்றன. மாணவர்கள் நடத்தும் இந்தப் போராட்டங்களுக்கு விரிவுரையாளர்களின் ஒத்துழைப்பும் கிடைத்து வருகின்றது.

மறியல் போராட்டமாகவும், ஊர்வலமாகவும் ஆரம்பித்த இந்தப் போராட்டங்கள் வன்முறைகள் ஏற்படும் அளவிற்கு தற்பொழுது விரிவு கண்டுள்ளது. மாணவர்கள் கைகலப்பில் ஈடுபட்டனர். அரசிற்கெதிரான போராட்டம் நடத்தியவர்களை அரச ஆதரவாளர்கள் வெளியில் வைத்துத் தாக்கியுள்ளனர். பல மாணவர்கள் காயமடைந்துள்ளனர்.

இதேவேளை பல்கலைக்கழக மாணவர்களின் போராட்டம் தொடர்ந்தால், சட்டத்தை நிலைநாட்ட ஆயுதப்படையினர் பல்கலைக்கழக வளாகங்களுக்குள் புகுவர் என பாதுகாப்பு அமைச்சு எச்சரித்துள்ளது. அத்தோடு வளாகங்களைச் சுற்றி பொலிஸாரையும் பெருமளவில் நிறுத்தியும் உள்ளது.

பல்கலைக்கழக மாணவர்களும் விரிவுரையாளர்களும், இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள் பல்கலைக்கழகங்களின் தரத்தையும், பட்டங்களின் தரங்களையும் குறைத்து விடும், பெறுமதியற்றவையாக்கி விடும் என்பதோடு அரசாங்கம் தமக்கு சார்பானவர்களுக்கும், ஆதரவாளர்களுக்கும் பட்டங்கள் வழங்கவே பல்கலைக்கழகங்களுடனிணைந்த கல்லூரிகளை உருவாக்கிறது எனக் குற்றம் சாட்டுகின்றனர். பல்கலைக்கழகக் கல்லூரிகள் நாட்டிலுள்ள தொழில்நுட்பக் கல்லூரிகளைப் போன்றவை. இந்தக் கல்லூரிகளுக்குப் பல்கலைக்கழக அந்தஸ்து வழங்குவதன் மூலம் பிரச்சினைகள் அதிகரிக்குமே ஒழிய குறையாது. அரசு பல்கலைக்கழகக் கல்லூரிகளை அமைப்பது வெறும் கண்துடைப்பாகும். மக்களை ஏமாற்ற மேற்கொண்ட நடவடிக்கை இதுவாகும் என பல்கலைக்கழகங்களின் ஆசிரியர் ஒன்றியத்தின் தலைவர் பேராசிரியர் றவித்தா சில்வா தெரிவித்துள்ளார்.

ஆனால், இணைந்த பல்கலைக்கழக கல்லூரிகள் அமைப்பது தொடர்பாக எழுந்துள்ள போராட்டமானது தனியாக கல்வி விவகாரத்துடன், மட்டும் சம்பந்தப்பட்டதாகக் கொள்ள முடியாது. அரசாங்கத்திற்கு பல்கலைக்கழகத்தில் உள்ள பொதுவான எதிர்ப்பாகவும், தென்இலங்கையில் அண்மைக் காலத்தில் எழுந்த அரசியல் நெருக்கடியை பின்னணியாகவோ அன்றி அதன் தாக்கமாகவோ கொண்டதும் உள்ளது.

1988, 1989இல் ஜே. வி. பியை பிரேமதாசா அரசாங்கம் இரும்புக் கரம் கொண்டு நசுக்கிய போது பல ஆயிரக் கணக்கில் மாணவர் பாதிக்கப்பட்டனர் பல நூறுபேர் கொல்லப்பட்டனர். பல்கலைக்கழகங்களும் சில வருடங்கள் மூடிக்கிடந்தன, இதனால். அரசாங்கம் மீதான வெறுப்பு பலமானதாகியது. அத்தோடு, அண்மையில் பல்கலைக்கழகத்தினுள் மீண்டும் சிறியளவில் உட்புகுந்த ஜே வி. பி.யினர் அதனைத் தீவிரப்படுத்தியுள்ளனர்.

இதேவேளைபல்கலைக்கழகங்களின் ஆசிரியர் ஒன்றியமும் அண்மையில் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி ஆட்சிமுறைக்கு எதிராக பலமான குரல் எழுப்பியிருந்தது மக்களின் அபிலாசைகளை ஜனாதிபதி ஆட்சி முறை நிறைவேற்றத் தவறி விட்டது என்றும், நாட்டிற்குப் பயன் பொருத்தமான உண்மையானதொரு ஜனநாயக ஆட்சி முறையைக் கொண்டுவர மக்கள் முழுமூச்சுடன் செயற்பட வேண்டும் என்றும், தேசிய பிரச்சினையில் மக்களுக்கு அறிவு புகட்ட பல்கலைக்கழக புத்திஜீவிகள் தயாராக இருப்பதாகவும் அதன் தலைவர் சில்வா பத்திரிகைகளுக்கு வழங்கிய பேட்டியில் தெரிவித்தார்.

இந்நிலையில், பல்கலைக்கழக மட்டத்தில் இன்று இணைந்த கல்லூரி தொடர்பாக எழுப்பப்பட்ட எதிர்ப்புக் குரலானது ஜனாதிபதி ஆர். பிரேமதாசாவிற்கும், அவரது அரசாங்கத்திற்கும் எதிரான குரலாகும். இந்த எதிர்ப்பின் பின்னணியில் எத்தகைய அரசியற் சக்திகள் உள்ளன என்பதை விட சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிராக வைக்கப்பட்ட குற்றச் சாட்டுக்களை இப்பல்கலைக்கழக மட்டம் ஏற்றுக் கொண்டுள்ளது என்பதையே இது காட்டுகின்றது. இந்த நிலையில் இந்தப் போராட்டமானது சிறிலங்கா ஜனாதிபதிக்கு எதிரான ஒரு அரசியற் போராட்டம் என்பதில் சந்தேகம் எதுவுமில்லை.

# சதாம் குசைனை வீழ்த்த புஷ் நிர்வாகம் முயற்சி

— வாஷிங்டன் போஸ்ட்

(வாஷிங்டன்)

ஈராக்கிய ஜனாதிபதி சதாம் குசைனை வீழ்த்துவதற்காக கடுமையான முயற்சியொன்றை புஷ்நிர்வாகம் மேற்கொள்ளப் போவதாக வாஷிங்டன் போஸ்ட் பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

தங்களை அடையாளம் காட்ட விரும்பாத அமெரிக்க உயர் அதிகாரிகள் சிலரது கூற்றுப்படி ஈராக்கிய புரட்சியாளர்களுக்கு இராணுவப் பயிற்சி அளிப்பது ஆயுத உதவிகளை அளிப்பது ஒரு தற்காலிக மாற்று அரசாங்கம் ஒன்றை விட ஈராக்கின் புரட்சியாளர்கள் அமைப்பதற்கு உதவி செய்வதுபோன்ற யோசனைகள் செயற்படுத்தப்படவுள்ளதாகவும் அப்பத்திரிகை தெரிவித்துள்ளது.

சதாம் குசைனை வீழ்த்துவதற்கான முயற்சிகளில் தன்மை விளைவுமா என்பது பற்றி கருத்து வேறுபாடுகள் இருப்பதாகவும். அமெரிக்க உளவறியும் நிபுணர்கள் சதாம் குசைனை வீழ்த்தும் இத்திட்டம் தோல்வியுறலாம் எனவும் கருதுகின்றார்கள் என்று வாஷிங்டன் போஸ்ட் குறிப்பிட்டுள்ளது.

## ஜி-15 உச்சி மாநாடு;

# இந்தியப் பிரதமர் வெனிசுலா பயணம்

(டில்லி)

ஜி-15 என்றழைக்கப்படும் பதினைந்துவளரும்நாடுகளின் இரண்டாவது உச்சிமாநாட்டில் கலந்து கொள்வதற்காக இந்தியப் பிரதமர் பி.வி நரசிம்மராவ் நேற்றுக் காலை வெனிசுலாவுக்குச் சென்றார்.

அவருடன் வெளியுறவு அமைச்சர் மாதவசிங் சோலங்கியும் வெளியுறவு செயலராகப்பதவி ஏற்கவிருக்கும் ஜே. என். டிக்ஸிற்றும் செல்கின்றனர்.

உச்சிமாநாடு நாளை தொடங்குகிறது. இம் மாநாட்டின் முக்கிய அம்சமான அபிவிருத்தி பற்றிய புதிய உலகப் பொதுக் கருத்து என்ற தலைப்பில் பிரதமர் நரசிம்மராவ் உரையாற்றுவார். மாநாடு மூன்று நாட்கள் நடைபெறும்.

# பட்டதாரி பயிலுநர் ஆசிரியர் நிரந்தர நியமனம்

(நல்லூர்)

சேவையிலுள்ள பட்டதாரி பயிலுநர் ஆசிரியர்கள் நிரந்தரமாக்கப்படவுள்ளனர். இவர்களை நிரந்தரமாக்கும் நடவடிக்கைகளை உடனடியாக மேற்கொள்ள வேண்டியுள்ளதால் இவர்களைப் பற்றிய சரியான புள்ளிவிபரங்களை கோட்டாரீதியாகத் தயாரித்து தமக்கு அனுப்பி வைக்குமாறு சகல கோட்டக் கல்வி உதவிக் கல்விப் பணிப்பாளர்களை கல்வி உயர்கல்வி அமைச்சின் செயலாளர் கடித மூலம் பணித்துள்ளார்.

மேலும் தற்போது நிரந்தரமாக்க நடவடிக்கை எடுப்பது பட்டதாரி பயிலுநர மட்டுமே என்றும், சாதாரண பயிலுநர் ஆசிரியர்களை அல்ல என்பதைத் தெளிவாக ஞாபகத்தில் வைத்துப் புள்ளி விபரங்களைத் தயாரித்து அனுப்புமாறு அக்கடித மூலம் கோரப்பட்டுள்ளது.

கையில்

'உணவுக்கோடு; அல்லது சுழற்றைவிடு' 'செய்க்கு நலமில்லை; நோய்க்கு மருந்தில்லை.' வேலைவாய்ப்பற்றவர்களுக்கு குழந்தைப்பசி புரிந்திடுமா? போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட சுலோக அட்டைகளை மக்கள் சுமந்து வந்தனர்.

யாழ். செயலகத்தை முற்றுகையிட்ட மக்களை அணுகி அவர்கள் கொண்டுவந்த மகஜரை யாழ் மேலதிக அரசாங்க அதிபர் திரு சண்முகநாதன் பெற்றுக்கொண்டார். இதை தாம் உடனடியாக ஜனாதிபதிக்கு அனுப்பி வைப்பதாகக் குறிப்பிட்டார்.

சிங்கள மக்களினால் சற்றேனும் கூட நினைத்துப் பார்க்க முடியாத உயர்ந்துவிட்ட விலைவாசியினை எவ்வித உழைப்புமற்ற எம்மால் எவ்வாறு எட்டிப்பிடிக்க முடியும் என்பதே நாளாந்த போராட்டமாயுள்ளது என்றும்,

மின்சாரம், வானொலி, வானொலி உபகரணங்கள் ஆகியவற்றின் மீதுள்ள இறுக்கமான தடைகளை விதித்தல் நீங்கள் உங்களால் வானொலி அலையில் விதிக்கப்படும் ஊரடங்கு உத்தரவுகளையும் யுத்த முன்னறிவிப்புக்களையும் நாங்கள் செவிமடுக்கவேண்டும் என்றோ அல்லது தற்காப்பு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றோ எவ்வாறு எதிர்பார்க்கமுடியும்? என்றும்

எதிர்கால வாழ்க்கையின் குறைந்த பட்ச நம்பிக்கையினைக் கூட உங்களிடமிருந்து பெறமுடியாத எம்மை தொடர்ந்து நீங்கள் வாழும் நாட்டின் குடிமக்கள் என்று கூறிக்கொள்வது வேடிக்கையாக உள்ளது என்றும் ஜனாதிபதியின் முகவரி இடப்பட்ட மகஜரில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இம் மகஜரின் பிரதிகள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடமும், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கத்தின் யாழ். கிளையிடமும் பேரணியினரால் கையளிக்கப்பட்டன. (தி)

# 3 தொகுதிகளில் ஜனதாதள் வெற்றி

(டில்லி)

பீகாரில் இந்த மாதம் லோக்சபாத் தொகுதியில் இடைத் தேர்தல்களில் மூன்று தொகுதிகளிலும் ஜனதாதள் வெற்றி அடைந்துள்ளது.

பாரிலோ சபாத் தொகுதியில் ஜனதாதள் வேட்பாளர் மிருதேவ்குமாரும், மாதிப்புரா தொகுதியில் ஜனதாதள் கட்சியின் தலைமைச் செயலாளர் சரத் யாதவ்வும் வெற்றி பெற்றுள்ளனர்.

# சிரித்திரன் வெளிவந்துள்ளது

(யாழ் பாணம்)

சிரித்திரன் ஐப்பசி, கார்த்திகை இதழ் வெளிவந்துள்ளது அஸ்வதி எழுதிய விட்டு விடுதலையாகி சிறுகதை நாதசுரனுடன் சில நிமிடங்கள் மணிவிழாக் கண்ட நாதஸ்வர வித்துவான் என் கே. பத்மநாதன் அவர்களுடனானபேட்டி, "மடமையைக் கொளுத்துவோம்" போட்டியில் பரிசு பெற்ற ஆதிலட்சுமி இராசையாவின் கட்டுரை உட்பட பல விடயங்களைத் தாங்கியதாக இந்த இதழ் அமைந்துள்ளது.

தமிழீழ

தொடர்ந்து மாவீரர்களுக்கு மக்களின் மௌன அஞ்சலி செலுத்தும் நிகழ்வுகள் இடம் பெறும். மணிகள் ஒலிக்கத் தொடங்கி 12 02 முடியும் வரை இந்த அஞ்சலி இடம் பெறும். இவ்அஞ்சலி வேளையில் "எங்களுக்காக மடிந்த உடன் பிறப்புக்களே உங்களை நாங்கள் மறக்கவில்லை உங்கள் நினைவு என்றும் எம் நெஞ்சில் நிழலாடும்" என மாவீரர்களை மனதில் நிறுத்திக் கொள்வோம்.

மாவீரர் நினைவாக மணி ஓசை ஒலிக்கும்போதே மக்கள் தமது சகல நடவடிக்கைகளையும் இடைநிறுத்தி மாவீரர்களுக்கு அஞ்சலி செய்வார்கள்.

இதனைத் தொடர்ந்து 12 03க்கு சகல மாவீரர்களும் துயிலும் இடங்களிலும் மாவீரர்கள் சுடர்கள் ஏற்றப்படும் அதேவேளை சகல பாடசாலைகள், அரச உயர்கல்வி நிறுவனங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள், ஆலயங்கள், வீடுகள், வீதிகள். சனசமூக நிலையங்கள், பொதுஸ்தாபனங்கள், வியாபார நிலையங்கள் யாவற்றிலும் மாவீரர் சுடர் ஏற்றப்படும்.

கூட்டுறவுச்

என்று யாழ். செயலக செய்தித் திட்டப் பணிப்பாளர் திரு பத்மநாதன் குறிப்பிட்டார்;

வர்த்தகர்களின் இந்நடவடிக்கையினால், மக்கள் பாதிப்படைந்துள்ளனர் என்று சுட்டிக்காட்டிய அவர் தற்போது கையிருப்பில் உள்ள சீனியை கூட்டுறவுச் சங்கம் மூலம் விநியோகிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது கூட்டுறவுச் சங்கங்களில் ஒரு கிலோகிராம் சீனி 24 90 சதத்திற்கு விநியோகிக்கப்படும் என்று குறிப்பிட்டார்

தனியார் வர்த்தகர்கள் பொருட்களை விற்பனை செய்யும் நடைமுறை இந்த வாரமும் தொடரும். அடுத்தவாரம் பொருட்களின் கையிருப்பைப் பொறுத்து தீர்மானிக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (தி)

தமிழீழம்

ந்த மாவீரர்நாள் நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பேசுகையில் விடுதலைப்புலிகள் மக்கள் முன்னணிச் செயலாளர் திரு. யோகரட்ணம் யோகி தெரிவித்தார.

அங்கு அவர் மேலும் உரையாற்றுகையில் இதுவரையில் தமிழீழ விடுதலைக்காகப் போராடி உயிர் நீத்த உரும்பராயைச்சேர்ந்த பொன்னுத்துரை சிவகுமாரன், செல்லையா பத்மநாதன் (கண்ணாடி), பெஞ்சமின், தங்கத்துரை (நடராசா தங்கவேல்), குட்டிமணி (செல்வராசா யோகச்சந்திரன்) ஜெகன் (கணேசானந்தன் ஜெகநாதன்), நடேசதாசன் (வைத்திலிங்கம் நடேசதாசன்), தேவன் (செல்லத்துரை சிவசுப்பிரமணியம்). சிறிதமார் (முத்துக்குமார் சிறிகுமார்). சிவராசும் மாஸ்ரர் (நவரெத்தினம் சிவபாதம்) ஆகியோரையும் மாவீரர்களாக கௌரவிக்க தமிழீழ விடுதலைப் புலிகள் முடிவெடுத்துள்ளனர்.

ஆனாலும் இதற்காக அவசரப்பட்டு தேசசமூகவிரோதிகளைக் கௌரவித்து விடக் கூடாதெனக் கூறினார். (ச

இன்றும

நிதி கடன் பத்திரதாரர்களில் தேர் ந்தெடுக்கப்பட்டவர்களுக்கு இன்று 26ஆம்திகதி காலை 10 மணிக்கு வண்ணார்பண்ணை மகளிர் கல்லூரியில் கடன் மீளளிக்கப்படும என்றும் அவர் அறிவித்துள்ளார்;

## தாக்குதலைத் தடுக்கவே ஊரடங்குச் சட்டமாம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் மாவீரர்கள் என்று கூறிக் கொல்லப்பட்டோர்களுக்காக நடாத்தப்படும் கொண்டாட்டங்களைப் பயன்படுத்தி தம் மீது தாக்குதல் நடாத்தப்படுவதைத் தவிர்ப்பதற்காகவே தமது கட்டுப்பாட்டின் கீழ் இல்லாத வன்னிப் பகுதியில் ஊரடங்குச் சட்டம் அமுல் படுத்தப்பட்டதாக வவுனியாவில் சிறிலங்கா இராணுவ உயர் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காகவே முன்னேற்பாடாக ஊரடங்குச் சட்டம் அமுல்படுத்தப்பட்டதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

## அமைச்சர் பெயரில் 30 லட்ச ரூபா மோசடி

(கொழும்பு)

அமைச்சர் ஒருவரின் பெயரைப் பயன்படுத்தி 30 லட்சம் ரூபா மோசடி செய்த மூன்று பேர் ரகசிய பொலிசாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஜப்பானில் தொழில் பெற்றுத் தருவதாகக் கூறி இந்த மூவரும் பலரிடம் பணம் பெற்றுள்ளார்கள் என்றும், இதற்காக அவர்கள் அமைச்சர் ஒருவரின் பெயரையும் பாவித்துள்ளார்கள் என்றும் ரகசியப் பொலிசார் தெரிவித்தனர்.

## தியாகச்சுடர் ஏற்றல் கலைஞர்களுக்கு அழைப்பு

விடுதலைப் புலிகள் கலை பண்பாட்டுக் கழகத் தலைமைச் செயலகத்தில் இன்று இரவு பன்னிரண்டு மணிக்கு இடம்பெறும் நினைவு ஒலி எழுப்பி மாவீரர்களை நினைவு கொள்ளும் நேரத்திலும், தொடர்ந்து இடம்பெறும் தியாகச் சுடரேற்றலும் நடைபெறவுள்ளன. இதனைத் தொடர்ந்து கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறவுள்ளது. இந் நிகழ்ச்சியில் எழுத்தாளர்கள், கலைஞர்கள், கவிஞர்கள், அறிஞர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு விடுதலைப் புலிகள் கலை, பண்பாட்டுக் கழகம் கேட்டுக்கொண்டுள்ளது. வருகை தரும் கலைஞர்களுக்கான வசதிகள் யாவுக தலைமைச் செயலகத்தில் செய்யப்பட்டுள்ளன.

## நாடு திரும்பும் அகதி மீது எயிட்ஸ் பரிசோதனை

(கொழும்பு)

தமிழகத்திலிருந்து நாடு திரும்பும் தமிழ் அகதிகள் மீது எயிட்ஸ் பரிசோதனை நடாத்தப்படும் என்று பாலியல் தடுப்பு நோய் இயக்குநர் டாக்டர் காமினி ஜெயக்குரு தெரிவித்துள்ளார்.

வடபகுதி மக்களுக்கு திருக்கோணமலை இறங்கு துறையில் வைத்து இப்பரிசோதனை மேற்கொள்ளப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

## கச்சதீவை இந்தியா மீளப் பெறப்போவதில்லை

· எட்வேட் கலேறியா

(டில்லி)

இந்தியா இலங்கைக்கு வழங்கிய கச்சதீவை இலங்கையிடமிருந்து இந்தியா மீளப் பெறாதென வெளியுறவுத் துறை துணை அமைச்சர் எட்வேர்ட் கலேறியா நேற்று லோக்சபாவில் தெரிவித்தார்.

தமிழக மீனவர்கள் இலங்கை இராணுவத்தால் துன்புறுத்தப்படும் குற்றச்சாட்டுக் குறித்து டில்லி சிறிலங்காவிடம் எதிர்ப்பைத் தெரிவித்துள்ள போதிலும், கச்சதீவைத் திரும்பக் கோரும் எண்ணமே இல்லை என்று அமைச்சர் குறிப்பிட்டார்.

அமைச்சரின் இக் கூற்று தமிழகத்திற்கு ஏமாற்றத்தையும், வருத்தத்தையும் தரும் பதிலென தி. மு. க. நாடாளுமன்ற உறுப்பினர் டி. கோபாலசாமி குறிப்பிட்டார்.

மத்திய அரசின் இந்த முடிவு தமிழ் நாடு முதலமைச்சர் ஜெயலலிதாவுக்குத் தனிப்பட்ட பின்னடைவு என்று கருதப்படுகிறது.

ஜெயலலிதா கச்சதீவைத் திரும்பப் பெற வேண்டும் என்று மத்திய அரசை வற்புறுத்தி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'விடுதலைப் புலிகள்' நாளை வெளிவருகின்றது

தமிழீழ விடுதலைப் புலிகளின் அதிகார பூர்வ ஏடு 'விடுதலைப் புலிகள்' பத்திரிகையின் குரல் 27 இதழ் நாளை வெளிவருகின்றது. இந்த இதழில் 'உணவு நெருக்கடியும் புலிகளும்' என்ற தலைப்பிலான ஆசிரியர் தலையங்கமும், 'வீரச்சாவடைந்த போராளிகளின் உடல்களை ஏன் புதைக்கிறோம்?' என்ற தலைப்பிலும், 'தமிழீழ மீட்பு நிதியும், தமிழீழ மக்களின் கடமையும்' என்ற தலைப்பிலுமான விளக்கக் கட்டுரைகளும் இடம் பெற்றுள்ளன. இந்த இதழொன்றின் அன்பளிப்பு 10-00 ரூபா ஆகும்.

இது தவிர மணலாற்று அமரில் வீரச்சாவடைந்த புலி வீரர்களின் பதிவேடும் நூலுருவில் தனியான ஒன்றாக வெளிவருகின்றது இதன் பிரதி ஒன்றின் அன்பளிப்பு 8-00 ரூபா ஆகும்.

சிங்கள மாணவர்

# பிரச்சினை போன்றதல்ல தமிழ் மாணவர் பிரச்சினை

· கலாநிதி எஸ். மோகனதாஸ்

சிங்கள மாணவர்கள் கல்வியோடு உத்தியோக வாய்ப்புகளையும் சேர்த்துப் பார்க்கிறார்கள். இது அங்குள்ள பிரச்சினை. இங்கு பல்கலைக் கழகங்களில் நுழையும் சந்தர்ப்பங்களை நழுவ விட்டு பல்கலைக் கழக அனுமதி பெற முடியாத மாணவர்கள் பல்கலைக் கழகங்களில் சேர முயற்சிக்கிறார்கள். இவ்வாறு வடமாகாண ஒன்றிணைக்கப்பட்ட பல்கலைக் கழகக் கல்லூரி பதில் பணிப்பாளர் கலாநிதி எஸ். மோகனதாஸ் நேற்று நடந்த செய்தியாளர் கலந்துரையாடலின் போது தெரிவித்தார்.

யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கலந்துரையாடலில் மதிவாளரும், பல்கலைக் கழகத் துணை வேந்தர் ஏ. துரைராஜாவும் கலந்து கொண்டார்கள்.

வரும் ஜனவரி மாதம் முதற் பகுதியில் பல்கலைக் கழகக் கல்லூரியில் கற்பித்தல் ஆரம்பமாகும். மகாபொல, விடுதி வசதிகளை ஆரம்பத்தில் வழங்குவிக்க மாட்டார்கள். மாணவருக்கு வழங்கப்படவிருக்கும் நன்மைகளை இப்போது திட்டவட்டமாகக் குறைத்துக் கூறிவிடவும் முடியாது என்றார் கலாநிதி மோகனதாஸ்.

பல்கலைக்கழகத்திற்கு அனுமதி பெற 37,500பேர் தகுதி பெறுகிறார்கள். இவர்களில் 9,500பேர் பல்கலைக்கழகங்களில் அனுமதி பெறுகிறார்கள். 25,000 பேர் பல்கலைக்கழகங்களுக்கு வெளியில் நிற்கிறார்கள். இவர்களில் ஒரு பகுதியாரையாவது உள்வாங்குவது என்ற நோக்கத்துடன் பல்கலைக்கழகக் கல்லூரிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. மேலும் பல்கலைக்கழகப் படிப்பிற்கு மாணவர் ஒருவருக்கு 50,000 ரூபா செலவழிக்கப்படுகிறது. இச்செலவை 30,000 ரூபாவாகமட்டுப்படுத்துவதும் இத்திட்டத்தின் நோக்கமாகும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

வழங்கப்படும் சான்றிதழ்கள் இரண்டாம் தரம் மூன்றாம் தரம் என்ற இல்லை யாழ். பல்கலைக் கழகம் தராதரத்தை உறுதிப்படுத்துவதோடு, சான்றிதழ்களும் யாழ் பல்கலைக் கழகத்தினால் வழங்கப்படும் என்றும், பல்கலைக் கழக கல்லூரி வெற்றிடங்களை நிரப்புவது பல்கலைக் கழக மானியக் குழுவின் வேலை. ஆனால் இப்போதுள்ள போக்குவரத்து மற்றும் தொடர்புச் சாதன வசதியின்மை காரணமாக வெற்றிடங்களுக்கு ஆள் சேர்க்கும் பணியில் யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தரின் சிபார்சு எதிர்பார்க்கப்படுகிறது என்றும் துணை வேந்தர் ஆ. துரைராஜா தெரிவித்தார்.

இராமங்கள் தோறும் பட்டிமன்றம் மிகவும் சுவை மிக்கதாக இருந்தது.

யாழ் பல்கலைக்கழகத்தில் மறுமலர்ச்சிக்கழகம் நடாத்திய மாவீரர் தின விழாவில் பேராசிரியர் துரைராஜா கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார்.

பூம்புகார் மாதிரிக் கிராமத்தில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணி எழுச்சிவிழா எடுத்திருந்தது. கலை நிகழ்ச்சிகள் பல இடம்பெற்ற இந்த எழுச்சிவிழாவில் இவ்விழா தொடர்பாக முதலில் நடாத்தப்பட்ட போட்டிகளுக்குப் பரிசில்களும் வழங்கப்பட்டன. இவ்விழாவில் விடுதலைப் புலிகள் மகளிர் முன்னணிச் செயலாளர் லோகரெட்ணம்யோகி சிறப்புரையாற்றினார்.

இதேவேளை குடாநாட்டின் பல பகுதிகளிலும் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது போன்று மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன கிராமம் கிராமமாகவும், வீதிவீதியாகவும் இந்நிகழ்ச்சிகள் இடம்பெற்றன வீதிகளில் அமைக்கப்பட்டிருந்த சகல பந்தல்களிலும் கலை நிகழ்ச்சிகளும், எழுச்சி கீதங்களும் இடம்பெற்றன.

இம் மாவீரர் நாள் நிகழ்ச்சிகள் நடைபெற்ற ஒவ்வொரு பகுதியிலும் ஆயிரக்கணக்கான மக்கள் குழுமியிருந்தனர்.

அதேவேளை வீதிகளில் இரவு வேளையில் மக்களின் நடமாட்டமும் அதிகரித்துக் காணப்பட்டது.

இன்று

ளியில் நடைபெற இருந்த அணிவகுப்பு இன்று நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது.

சீரற்ற வானிலை காரணமாக நேற்று நடைபெறவிருந்த பேரணி அணிவகுப்பு நிறுத்தி வைக்கப்பட்டதாக தெரியவருகிறது. இன்று வானிலை சீராக இருப்பின் திட்டமிட்டபடி கல்வியங்காட்டில் இரவு எட்டு மணிக்கு நடைபெறும் என தெரிவிக்கப்படுகிறது. மேற்படி அணிவகுப்பினை விடுதலைப் புலிகளும் காவல் துறையினரும் இணைந்து நடாத்தவிருந்தது தெரிந்ததே.

இல. திரும்பும் அகதிகளுக்கு

## மத்திய அகதிமுகாம்; இந்தியா கோரிக்கை

தமிழகத்திலிருந்து திருக்கோணமலை திரும்பும் அகதிகளுக்கு அங்கு மத்திய அகதிமுகாம் ஒன்றை அமைக்கவேண்டுமென இந்திய அரசு இலங்கைக்கு யோசனை தெரிவித்துள்ளதாக இ. தொ. க. தலைவர் எஸ். தொண்டமான் தெரிவித்துள்ளார்.

இந்திய விஜயத்திலிருந்து திரும்பிய எஸ். தொண்டமான் இத்தகவலை கொழும்பில் வெளியிட்டார் என்று கொழும்புப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மத். கிழ. பேச்சுவார்த்தையை

## வேறு ஒரு இடத்தில் நடத்த சமீர் வேண்டுகோள்

(லண்டன்)

மத்திய கிழக்கு சமாதானப் பேச்சுவார்த்தையை வாஷிங்டனில் நடத்துமாறு இஸ்ரேலிய பிரதமர் சமீர் அமெரிக்க ஜனாதிபதியிடம் வேண்டுகோள் ஒன்றை விடுத்துள்ளார்.

வாஷிங்டன் வெகு தொலைவில் இருப்பதால் இஸ்ரேலின் சார்பில் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடுவோரை இஸ்ரேலிலுள்ள அரசியல் முடிவெடுப்போருடன் தொடர்புபடுத்துவது கஷ்டமான காரியமாக உள்ளது எனவும் தெரிவித்த சமீர் இந்த மாநாட்டை வேறொரு இடத்தில் நடத்த வேண்டும் எனக்கேட்டுள்ளார்.

பின்னர் இது குறித்து செய்தியாளர்களிடம் பேசிய சமீர் ''தங்களுக்கு நட்புறவும் நிதியுதவியும் தரும் அமெரிக்காவின் நெருக்குதலுக்கு பணிந்து வாஷிங்டனில் மாநாடு நடைபெற்றால் கலந்து கொள்ளவேண்டி இருக்கும்'' என்று தெரிவித்தார்.

## மரண அறிவித்தல்

### திருமதி அன்னம்மா நாகலிங்கம்

கட்டுடை மானிப்பாயைச் சேர்ந்த திருமதி அன்னம்மா நாகலிங்கம் திங்கட்கிழமை இரவு காலமாகி விட்டார் இவர் சாவகச்சேரி பலாலி பென்ஷனியர் இராமு நாகலிங்கத்தின் அன்பு மனைவியும், மோகனாம்பிகை, சமனதேவி B. Sc (இளைப்பாறிய ஆசிரியை, யாழ். இந்து மகளிர் கல்லூரி), அன்னலட்சுமி B.Sc (நிர்வாக அதிகாரி இங்கிலாந்து), கிருஷ்ணானந்தன் (வங்கி உத்தியோகத்தர், கனடா, முன்னாள் விஞ்ஞான ஆசிரியர் யாழ் இந்துக் கல்லூரி) சரோஜினி தேவி [நிர்வாக அதிகாரி இங்கிலாந்து] ஆகியோரின் அன்புத்தாயாரும், சாவகச்சேரி மார்க்கண்டு [எழுதுவினைஞர்- வர்த்தகர்], சிவசுப்பிரமணியம் [பென்ஷனியர்- தனியார்துறையில் இருந்து இளைப்பாறிய உதவிக் கணக்காளர்] Arnold [வங்கி உத்தியோகத்தர், இங்கிலாந்து], சரோஜினி B A [கனடா, முன்னாள் ஆசிரியை கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம்] கணேசு [கணக்காளர், இங்கிலாந்து] ஆகியோரின் மாமியாரும், கனடாவில் வசிக்கும் ரவீந்திரன் (Mechanical Engineering Undergraduate), ஜெனன், இவானி, லக்சி, இங்கிலாந்தில் வசிக்கும் ரமணி (Computer Science Undergraduate) சூரியகுமார், அரசகுமார் ஆகியோரின் அன்பு பேர்த்தியுமாவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் செவ்வாய்க்கிழமை [26 - 11 - 91] பிற்பகல் இரண்டு மணியளவில் கோம்பையன்மணல் மயானத்தில் நடைபெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

78, கட்டி அம்மன் றோட், வண்-கிழக்கு யாழ்ப்பாணம்.

தகவல்
S சிவசுப்பிரமணியம்

(R/1953)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரர் வீதி, 31 ஆம்இலக்கத்திலுள்ள ''ஈழநாதம்'' பணிமனையில் 1991 ஆம்ஆண்டு நவம்பர் மாதம் 26 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது